## நவம்பர் 14 உலக சர்க்கரை நோய் தினம்

# கே.எம்.சி.எச்., மருத்துவமனையில் நீரழிவு நோயாளிகளுக்கு பாதுகாப்பான சிகிச்சை

## சர்க்கரை நோய் நிபுணர் டி.ஆர்.சிவஞானம் விளக்கம்



டாக்டர்.சிவஞானம்

**கோவை, நவ.14:**கே.எம்.சி.எச்.,மருத்துவமனையின் சர்க்கரை நோய் நிபுணர் டாக்டர் டி.ஆர்.சிவஞானம் கூறியதாவது:

கே.எம்.சி.எச்.,மருத்துவமனையில் நீரழிவு மருத்துவ நிபுணரின் ஒட்டுமொத்த அனுபவத்தின் மூலமும் அவரது நம்பிக்கையினாலும் தன்னுடைய நோயாளிகளுக்கு தேவையான குறிப்பிட்ட மருந்துகள் பரிந்துரைக்கப்படுகிறது. ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்ற வெவ்வேறு மருந்துகள் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் நீரழிவு மருத்துவ நிபுணர் பல்துறை மருத்துவர்களை கலந்தாலோசித்து சரியான குறிப்பிட்ட மருந்தை தேர்ந்தெடுந்து கொடுக்கிறார்.

நீரழிவு நோயாளிக்கு உகந்த மருந்தை கொடுப்பது தான் நோயாளியின் துவக்க நிலைக்கு ஏற்ற சிகிச்சையாகும். அது மட்டுமல்லாமல், நோயாளி மேற்கொள்ள வேண்டிய தொடர் சிகிச்சைக்கும், மேல் சிகிச்சைக்கும், அதனால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகளுக்கும் துவக்க நிலை சிகிச்சையே காரணமாகிறது. இதனால் கே.எம்.சி.எச்., மருத்துவமனையில் நீரழிவு நோயாளியின் துவக்க நிலைக்கு சரியான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், ஏராளமானோர் நீரழிவு பாதிப்பில் இருந்து நீங்கியுள்ளனர்.

**நீரழிவு நோய் ஏற்படுத்தும் பாதிப்புகள் :**

பொதுவாக ஒருவருக்கு சர்க்கரை நோய் இருந்தால், அது அவரின் கண்பார்வையை பாதிக்கும். இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுத்தும், அது இருதயத்தை பாதித்து, இருதய நோயை உருவாக்கும். ஆனால், சர்க்கரை நோயாளிகளுக்கு வலி உணர்வு ஏற்படுவது குறைவாக உள்ளதால், முதல்கட்ட மாரடைப்புகள் ஏற்பட்டாலும், அது தெரியாமலே போய்விடும்.

அதே போல் அதிக இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக செயல்பாடு குறைவு ஏற்படும். சிறுநீரகம் செயலிழந்தால், மாற்று சிறுநீரகம் பொருத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படும். மேலும் கால்களில் மதமதப்பு, எரிச்சல், உணர்ச்சி குறைவு ஏற்பட்டு, கால்களில் வெடிப்பு, ஆணி, மற்றும் காயங்கள் ஏற்பட்டால் வலி உணர்விழந்து புண் பெரிதாகும். அது ஆறாத புண்ணாகி, கால் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதனால், சர்க்கரை நோயாளிகள் சர்க்கரை நோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இதர உறுப்புகளின் நிலையையும் பரிசோதிக்க வேண்டும். இத்தகைய பரிசோதனைக்குரிய நவீன கருவிகளும், அதற்கு சிகிச்சை அளிக்கும் பல்துறை மருத்துவ நிபுணர்களும், கே.எம்.சி.எச். மருத்துவமனையில் ஒருங்கிணைந்து அமைந்துள்ளதால், சர்க்கரை நோயாளிகளுக்கு தேவையான முழுமையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. சர்க்கரை நோய் பக்கவிளைவின் பாதிப்புகள் நீங்கி முழுமையாக குணப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடிகிறது.

மேலும் விபரங்களுக்கு, சர்க்கரை நோய் நிபுணர் டாக்டர் டி.ஆர்.சிவஞானம்,கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு,கோவை.போன் : +91 422 4323108 இ-மெயில்: *drsivagnanam@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

Advt